Registered No. M-4483

Madras War Review (TAMIL) 5-5-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV   1944-ம்ஞூ மேமீ 5உ, வெள்ளிக்கிழமை   இதழ் 35



மார்ஷல் ஸ்டாலின்

ஹிட்லரின் ஜெர்மனியை நசுக்க சேர்ந்தாப் போல் தாக்க வேண்டும்

இத்தாலியப் போர் முனையில் ஜெர்மன் படைகளை மடக்கி வைத்திருப்பதாலும், இதர வழிகளிலும், செஞ்சேனையின் வெற்றிகளுக்கு, நமது மாபெரும் நேசதேசங்களாகிய ஐக்கிய அமெரிக்காவும், கிரேட் பிரிட்டனும், பெரிதும் ஆதர வளித்து வருகின்றன. யுத்தத்திற்கு அத்யாவசியமான மூலப் பொருள்கள், தளவாடங்களைத் தருகின்றனர் நேச தேசத்தினர். ஜெர்மனியின் இராணுவ ஸ்தலங்களை இடைவிடாது ஓங்கித் தாக்குவதன் மூலம், நாஸிகளின் போர் பலத்தைக் குறையச் செய்கிறார்கள்.

செஞ்சேனை தீவிரச் சண்டைக்குப் பின், எதிரி வசம் அகப்பட்டுக்கொண்டிருந்த சோவியத் நாட்டின் முக்கால் பகுதியை மீட்டு விட்டது. இனி நாம் செய்யவேண்டியது எதிரியை நம் நாட்டை விட்டுப் பூராவும் துரத்துவதே. கருங்கடலி லிருந்து பாரன்ட்ஸ் கடல் வரை மறுபடியும் சோவியத் ரஷ்யாவின் எல்லையை ஸ்தாபிக்க வேண்டும்.

ஜெர்மன் படையை படு காயப்பட்டுள்ள காட்டு மிருகத்துக்கு ஒப்பிடலாம். அது காயங்களை ஆற்றிக்கொள்ள குகைக்கு (ஜெர்மனிக்கு) நகர்ந்து செல்கின்றது. காய மடைந்து குகைக்குள்ளிருந்தாலும் அந்த மிருகத்தினால் ஆபத்து நீங்கிவிட்டதென்று நினைக்க முடியாது.

நமது தேசத்தையும், நமது நேச தேசங்களையும் அடிமைப் பேயினின்றும் விடுவிக்க வேண்டுமானால், குகைக்குள் ஒடுங்கி யிருக்கும் காயமடைந்த ஜெர்மனிய மிருகத்தை மேலும் தொடர்ந்து துரத்தி குகைக்குள்ளேயே அடியோடு மடியச் செய்யவேண்டும்.

எதிரியைத் துரத்தி அடிக்கும்போது ஹிட்லரின் ஆக்ரமிப்புக்குட் பட்டுள்ள நமது போலிஷ், ஸெக்கோஸ்லோவக்கிய சகோதரர்கள், மேற்கு ஐரோப்பிய நாட்டு மக்கள் இவர்களை ஜெர்மானிய அடிமைக்கட்டினின்றும் விடுவிக்க வேண்டும். சோவியத் எல்லையை விட்டு ஜெர்மானியரை வெளியேற்றுவதை விட இது கஷ்டமான காரியம் என்பது தெளிவு. இதைச் சாதிக்க சோவியத் ரஷ்யா, கிரேட் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டும். ஒரே சமயத்தில், ஜெர்மனியை நமது படைகள் கிழ் திசையிலும், இதர நேசப் படைகள் மேற்றிசையிலும் பாய்ந்து தாக்க வேண்டும்.

இப்பேர்பட்ட சேர்ந்தாப்போல் ஒரே சமயத்தில் தாக்குவதனால் தான் ஹிட்லர் ஜெர்மனியை அடியோடு நசுக்க முடியும் என்பதில் சந்தேகமேயில்லை.

—மார்ஷல் ஸ்டாலின் மே தின விழாவுக்கு விடுத்த செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மார்ஷல் ஸ்டாலின்	1
ஹிட்லரின் ஜெர்மனியை நசுக்க சேர்ந்தாப் போல் தாக்க வேண்டும்	1
முரசொலி	2
தலையங்கம் : இரண்டாம் போர் முனை	3
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
"மூழ்கடிக்கப்பட முடியாத விமானந் தாங்கிக் கப்பல்."	5
ஜப்பானின் அக அழகும், முக அழகும் ..	6
ஜப்பானியர்கள் தவிடு பொடி	7
மகனுக்குத் தந்தை செய்த உபதேசம் ..	8
இந்த மந்த மேன் ? ..	9
சில ரசமான செய்திகள் ..	10
ஏ. ஆர். பி. பெண்கள் படை	11
யுத்த நாட் குறிப்புக்கள்	12

மு ர சொ லி

ஜப்பானின் போர் பலம் குறைக்கப்படுகிறது

"ஜப்பானின் ஆகாய விமானப் படையும், வியாபார கப்பல் படையும் வெகு தீவிரமாக நேசப் படைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனுல் ஜப்பானின் போர் பலம் குறைவடைந்திருக்கிறது. கூட்டு அபிவிருத்தி மண்டலம் ஏற்படுத்த முயற்சி செய்யும் ஜப்பான் தன் கனவு சிதைந்து போய்க்கொண்டிருப்பதைக் காண்கிறது.

ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டபின் இளைப்பாறும் எண்ணம் ஏற்படக்கூடாது. நம் முயற்சியை தளரவிடக் கூடாது."

கேப்டன் ஆலிவர் லிட்டில்டன்,
பிரிட்டிஷ் உற்பத்தி மந்திரி, ஆல்டர்ஷாட் நகரில்
சனிக்கிழமை பேசும்போது கூறியது.

* * * *

மகத்தான போர் கட்டம்

"சரித்திரத்திலேயே பிரிட்டனே அன்றி அமெரிக்காவோ, அல்லது வேறு எத்தேசமோ இதுவரை செய்திராததோர் மகத்தான போர் கட்டத்திலிறங்கும் தருவாயில் நாமிருக்கிறோம். நார்வேயிலிருந்து பிரனீஸ் வரை பரந்து கிடக்கும் கடலோரப் பிரதேசத்தை ஜெர்மனி பாதுகாக்க வேண்டியிருக்கிறது. நமது தாக்குதல் எங்கு ஏற்படும் என்று ஜெர்மானியர் அனுமானிக்கலாம். எங்கோ தாக்குதல் நடக்கும் என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். தகர்க்க முடியாத பல கோட்டையரண்களைக் கட்ட அவர்களுக்குப் பல மாத அவகாசமிருந்திருக்கிறது. அவர்களது கோட்டைகளில் நல்ல தேர்ச்சி பெற்ற பல பகுதிப் படைகள் உஷாராக இருக்கின்றனர். தங்கள் பாதுகாப்பை பலப்படுத்த மனித யூகத்துக் கெட்டிய ஒரு காரியத்தையும் செய்யாது அவர்கள் இல்லை. நம்மை லகுவில் உட்புக அவர்கள் விட மாட்டார்கள். அப்படி நாம் உட்புகுந்த பின்னரும், நாம் முன்னேற அவர்களுடன் கடுமையாகவும், கொடூரமாகவும் போராடவேண்டும்."

—லார்டு ஹாலிபாக்ஸ்,
அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானீகர், சார்ல்ஸ்டன் நகரில்
செவ்வாய்க்கிழமை பேசியது.

* * * *

ஜப்பானியர் தெய்வீக பிறப்பல்ல

"ஜப்பானியர்களுடைய போர் ஊக்கம் குறைந்துவிட்டதாகப் புலப்படவில்லை, எனினும் அவர்கள் தெய்வீகப் பிறப்பல்ல. அவர்கள் தங்கள் திட்டங்களை இஷ்டம்போல் தடையின்றி நிறைவேற்றிவிட விட்டு விட்டால் அவர்கள் வெல்ல முடியாத வல்லமை பெற்றவர்களாகி விடுவார்கள். ஆனுல் ஏதாவது சிக்கல்களையும், தடைகளையும் ஏற்படுத்திவிட்டால், அவற்றைச் சீர்படுத்தி முன்போல் போராடுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள்."

—லெப்டினனட்-ஜெனரல் எட்வர்டு பட்டிக்,
நியூஸிலந்துப் படைகளின் பிரதம காரியஸ்தர், லண்டனில்
திங்கட்கிழமை பேசியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் வருஷம் மேமீ 5உ, வெள்ளிக்கிழமை | இதழ் 35

இரண்டாம் போர் முனை

இரண்டாம் போர் முனைக்கு வேண்டிய ஆயத்தங்கள் யாவும் தயாராய் விட்டன வென்று சொல்லலாம். மன்னர் பிரான் ஒரே நாளில் (எப்ரல்மீ 26உ) இரு தடவைகள் பிரதம மந்திரி சர்ச்சிலை சந்தித்துப் பேசி யிருக்கிறார். மேலும் ஜார்ஜ் சக்கிரவர்த்தியார் இரண்டாம் போர் முனைத் துருப்புகளின் வேலை முறையையும், ஒத்திகைகளையும் பார்வையிட மூன்று தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்ததாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. தவிர மேமீ 1உ ராய்ட்டர் நிருபர் ஹிட்லரின் ஐரோப்பிய கோட்டையை நேசத் துருப்புகள் பிரிட்டன், மத்திய தரைக் கடல் பிரதேசம், ரஷ்யா இந்த மூன்று பக்கங்களிலிருந்து ஒரே சமயத்தில் தாக்கலாம் எனச் சொல்லப்படுவதாக அறிவிக்கிறார். மே மாதம் முதல் தேதி லண்டனில் கூடிய ஏகாதிபத்திய மகா நாட்டில் கானடா, ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, ஆப்ரிக்கப் பிரதம மந்திரிகளும், யுத்த மந்திரி சபையில் இந்தியாவின் பிரதிநிதிகளான காஷ்மீர் மகாராஜாவும் சர் பிரோஸ்கான் நூனும் ஆஜரா யிருந்தார்கள். அம்மகாநாட்டில் தலைமை வகித்த மிஸ்டர் சர்ச்சில் ஐரோப்பிய படை எடுப்பு முஸ்தீபுகள் பற்றிப் பிரஸ்தாபித்து உருக்கமும் ஊக்கமுமான தோர் பிரசங்கம் செய்தார். ஜெனரல் ஸ்மட்ஸ், சர் ஜான் கர்ட்டின் (ஆஸ்திரேலிய பிரதம மந்திரி), மக்கன்ஸிகிங் (கானடா பிரதம மந்திரி), பீட்டர் ப்ரேஸர் (நியூஸிலந்து பிரதம மந்திரி) முதலியோர் ஐரோப்பிய தாக்குதலுக்கு தங்கள் பூரண ஆதரவையும் அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இந்தியப் பிரதிநிதிகளும் இந்தியா யுத்த முயற்சியில் பரிபூரணமாகவும், ஏகமனதாகவும் ஈடுபட்டிருப்பதை விளக்கி இருக்கிறார்கள். வெளிப்படையாக நடக்கும் காரியங்களைக் கவனித்தால் நேச நாட்டுப் படைகளின் ஐரோப்பிய பிரவேசம் வெகு சீக்கிரமாகவே ஏற்படலாம் என்றே யூகிக்க வேண்டியிருக்கிறது.

தவிர மே தின விழாவுக்கு அனுப்பிய செய்தியில் இது பற்றி மார்ஷல் ஸ்டாலின் பிரஸ்தாபித்திருக்கிறார். சேர்ந்தாப் போல் நாலா பக்கமும் ஜெர்மனியைத் தாக்கினால் தான் ஜெர்மனியை முறியடிக்க முடியும் என்பதை அவர் வற்புறுத்தியிருக்கிறார். அவரது சொற்கள் ஆணித்தரமானவை. நிதானமாகவே அவர் பேசி யிருக்கிறார்.

ஏற்கனவே ஐரோப்பிய படை எடுப்பு பற்றி சில மாதங்களுக்கு முன் நடை பெற்ற டெஹ்ரான் மகாநாட்டில் மார்ஷல் ஸ்டாலின், ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரதம மந்திரி சர்ச்சில் முதலியோர் கலந்து பேசியதும், அவர்களுக்குள் பரஸ்பர மன ஒற்றுமையும், திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏகமனதான அபிப்பிராயமும் ஏற்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். மார்ஷல் ஸ்டாலின் மே தின விழாவில் தன் தேசத்தினருக்கும், நேச தேசத்தினர்க்கும், ஹிட்லரின் ஆதிக்கத்துக்குட்பட்டு ஆடி வரும் நாட்டினருக்கும் விடுத்துள்ள வேண்டுகோளும், அபிப்பிராயங்களும் நேச தேசத் தலைவர்களின் கருத்தையே தழுவியிருக்கின்றன. ரஷ்யப் போர் முனையில் சில நாட்களாக சற்று ஓய்வு காணப்படுகிறது. இந்த ஓய்வுக்குக் காரணம் படையெடுப்பு ஆரம்பமாகும் போது ஜெர்மனியைக் கீழ்த் திசையிலிருந்து கடுமையாகத் தாக்குவதற்கு வேண்டிய அத்யாவசியமான ஏற்பாடுகளை ரஷ்யர்கள் செய்து வருவது தான் என்று தீர்மானிக்கப்படுகிறது. சோவியத் படைகள் தங்களது பங்கை வெகு செம்மையாக நடத்தி வைப்பார்கள் என்பதற்குச் சந்தேகமே யில்லை.

யுத்தத்தின் நெருக்கடியானதும் முக்கியமானது மோர் கட்டம் துவங்கும் தருவாயிலிருக்கிறது. அதற்கு முன்னணி வேலையான எதிரி போர் பலத்தை நாச மாக்கும் பணியை அமெரிக்க-பிரிட்டிஷ் விமானங்கள் தீவிரமாக நடத்தி வருகின்றன. ஆயிரக் கணக்கில் வெடி குண்டு விமானங்கள் எதிரி பிரதேசங்களில் சென்று யுத்த தளவாட உற்பத்தி சாலைகளையும், துருப்புகள் தங்கும் இடங்களையும், ஆயிரக் கணக்கான டன் குண்டுகளை வீசி நாசப்படுத்தி வருகின்றன. ஐரோப்பிய படை யெடுப்பு ஆரம்பித்து எல்லாவித எதிர்ப்புகளையும் கடந்து வெற்றிக்கு வழிதேடும் என்று நம்பலாம். கஷ்டமான காரியமா யிருந்தாலும், அதை நிறைவேற்றுவதில் நேச தேசத் தலைவர்கள் முயற்சி மஹா பெரிது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

இம்பால் பகுதியில் 17-வது இந்திய டிவிஷனுடன் கலந்து போராடிய பர்மா செய்திப் படையினர்.

இம்பால் பகுதியில் ஜப்பானிய இலக்குகளை பஞ்சாபியர்கள் சுடுவதற்குத் தயாராக இருக்கின்றனர்.

போக்கு வரத்து ரஸ்தாக்களுக்காகவும் சாதனங்களுக்காகவும் இந்தோ-பர்மா போர் முனையில் நடந்து வந்த சண்டையின் முதற் பகுதி அனேகமாக முடிந்து விட்டதாகச் சொல்லலாம். ஒரு மாதத்திற்கு மேலாகவே கடுமையான போராட்டம் நடந்து வந்திருக்கிறது. இப்போராட்டத்தின் முதற்பகுதியில் ஏற்பட்ட வெற்றிகளுக்கான கௌரவம் 14-ம் படையைச் சேர்ந்ததாகும். இப்படையே இம்பாலையும், கொஹிமாவையும் கைப்பற்ற எதிரிகள் செய்த முயற்சிகளை யெல்லாம் பயனற்றதாகச் செய்தது. இந்தப் பிரதேசத்தின் போர் நிலையைப் பற்றி, தென் கிழக்கு ஆசியா மாபெருந் தலைவர் லார்ட் லூயி மவுண்ட் பேட்டன் சனிக்கிழமை விளக்கி யிருக்கிறார். அவர் நேச படைகளின் வேலைகளின் முக்கிய நோக்கம் எதிரிகளின் ஸ்தானங்களைக் கண்டு பிடித்து அவர்களை எப்புறமும் நகரவிடாதபடி ஸ்தம்பிக்கச்செய்து, ரஸ்தாக்களின் பூரா உபயோகத்தையும் அவர்கள் அடையாதபடி செய்வதே என்று கூறியிருக்கிறார். இந்த அரங்கத்தில் நேசப் படைகளின் போராட்டத்தைப்பற்றிக் கவனிக்கு முன் சில முக்கியமான விஷயங்களை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த முனை அரக்கானிலிருந்து சிந்த்வின், ஹக்காங் பள்ளத் தாக்குகள், யுனான் வரை சுமார் 800 மைல்கள் பரவியிருக்கிறது. இந்த அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் உள் நாட்டுப் போக்கு வரத்து சாதனங்கள் எதிரிகளுக்கு இருக்கின்றன. நம்மிடம் தற்போதுள்ள படைகளைக் கொண்டு, எதிரிகள் சிற்சில இடங்களில் நுழைவதைத் தடுப்பது சுலபமல்ல. "இம்பால் முனையில் ஜப்பானியர் உட்புகுந்தது எதிர் பாராததல்ல. அதற்கு அரசியல் பிரசார லட்சியமும் ஒரு காரணம்," என்று லார்ட் மவுண்ட் பேட்டன் கூறுகிறார். மேலெழுந்த வாரியானதும், பகட்டானதுமான போலி வெற்றிகளைக் காட்டி ஜப்பானிய மக்களின் போர் மனப்பான்மையைக் காப்பாற்றிவர டோக்கியோ முயலுகிறது. டோக்கியோ ரேடியோ எதிரியை தும்சம் செய்வதைப்பற்றியும், பிரமாத வெற்றிகளைப் பற்றியும், டில்லிக்கு வெற்றிக் கொடியுடன் வரப் போவதாகவும் கொக்கரித்தது. இப்பொழுது ஆர்ப்பாட்டம் அடங்கி ஒடுங்கி விட்டது. ஜயமிட்டாமற் போனதற்கு சால் ஜாப்புகள் சொல்லுகிறது. எப்ரல் மாதம் 22ம் தேதி டோக்கியோ ரேடியோ, ஜப்பானியர்கள் தங்கள் எண்ணங்களை ஈடேற்ற முடியாது போனதற்குக் காரணம் கூறுகையில் "ஜப்பானியப் படைகளை எதிரிகள் மிகுந்த கடுமையாக எதிர்க்கின்றார்கள்" என்று சொல்லுகிறது.

அரசியல் பிரசாரமும் ஜப்பானிய நோக்கங்களுள் ஒன்று என்று லார்டு லூயி கூறி யிருக்கிறாரல்லவா? மணிப்பூர் பகுதியில் ஜப்பானியர் புகுந்ததின் முக்கியமான நோக்கம் இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. அதாவது, இப்பொழுது வட பர்மாவில் முன்னேறிச் செல்லும் ஜெனரல் ஸ்டில்வெல்லின் துருப்புகளுக்கு சப்ளைகள் போய்ச் சேராதபடி நேச தேசத்தினரின் போக்கு வரத்துப் பாதைகளைத் துண்டிப்பது தான்.

அஸ்ஸாமில் தற்சமயம் நடந்து வரும் போராட்டத்தைப் பற்றி நாம் சரியாக உணர வேண்டுமானால் அதன் பூரா சம்பந்தா சம்பந்தங்களையும் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் கிழக்கு ஆசியப் போரில் இது ஒரு பாகம் தான் என்பதை மறக்கக் கூடாது. பர்மாவில் நமது சப்ளை மார்க்கங்களை அவர்கள் துண்டிப்பதில், அவர்கள் சப்ளை மார்க்கங்களை நாம் துண்டிப்பதில் வெற்றியடைந்த பாதியளவுக்குக் கூட அவர்கள் சாதிக்க முடியவில்லை. மித்கியானாவை பாதுகாக்கப் போராடும் ஜப்பானியப் படைகளை நாம் திக்கு முக்காடச் செய்து விட்டோம். அஸ்ஸாம் முனையில் ஜப்பானியர் முன்னேறி அடர்ந்த காடுகளுக்குள் புகுந்தால் அவர்களுக்கான தேவைப் பொருள்கள் வந்து சேருவது மேலும் கடினமாகும். ஏனென்றால் அவர்கள் சாமான்கள் கொண்டு போவதுக்கு பல ஆபத்துக்க்குட்பட்டே ஆக வேண்டும். அவர்களின் பாதைகளையும், போக்குவ்ரத்துகளையும், நாம் கடல் மூலமாகவும் ஆகாய விமான மூலமாகவும் தாக்கலாம்.

கடல் மூலம் ஸபாங்கை தாக்கியது, எதிரிகளுக்கு கஷ்டங்களை அதிகரிக்க நாம் வேறு திட்டங்களையும் கையாளுகிறோம் என்பதைக் காட்டுகிறது. நிலத்தில் நடக்கும் சண்டை போதாது. அட்மிரல் மவுண்ட் பேட்டனின் தலைமைக் காரியாலயத்தை சிலோனுக்கு மாற்றி யிருப்பதும், இந்தியக் கடலோரங்களில் மகத்தான கப்பல் படை உலவி வருவதும், ஏதோ ஒரு பெருத்த தாக்குதலுக்கு அறிகுறிகளாகவே தோன்றுகின்றன. அதற்கான பிரயத்தனங்கள் தீவிரமாக நடந்து வருவதாக நம்பப்படுகிறது. பஸிபிக் பிரதேசத்தில் நேசப் படைகள் பிலிப்பைன் தீவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே இம்பால்-கொஹிமா முனையில் நடக்கும் போர், ஜப்பானுக்கு எதிராக நடக்கும் மாபெரும் யுத்த திட்டத்தில் ஒரு அம்சம் என்பது விளங்குகிறது.

இம்பால் பகுதியில் ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றப் பட்ட 'மிஷின்கள்' முதலியவற்றுடன் ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி காணப்படுகிறார்.

"மூழ்கடிக்கப்படமுடியாத விமானந் தாங்கிக் கப்பல்"

(ஆஸ்வால்ட் டீச் எழுதியதன் மொழி பெயர்ப்பு)

இந்த யுத்தத்தில் சில புள்ளி விவாங்களை ஒப்புக்கொள்ள நாம் பழகிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்தப் புள்ளிகளைத் தயாரிக்க எவ்வளவு ஸ்தாபனம், உழைப்பு, கூட்டுறவு ஆகியவை தேவையாயிருக்கின்றன என்பதைக் குறித்து நாம் கவலை கொள்ளுவதில்லை. உதாரணமாக, ப்ராங்போர்ட்டைத் தாக்கும்போது 1,500 விமானங்கள் (800 வெடி குண்டு விமானங்கள் 700 போர் விமானங்கள்) ஏக காலத்தில் கலந்து கொண்டதாக, நாம் படித்திருக்கிறோம். இந்த 1,500 விமானங்களும் ஒரே விமான தளத்திலிருந்து கிளம்பியவையா என்பதைக் குறித்து, ஒருவராவது அக்கரை கொள்ளுவது கிடையாது. எவ்வளவு தான் பெரிய விமான தளமாகவிருந்தாலும் 1,500 விமானங்களைக் கொள்ளக் கூடிய விமான தளங்கள் இடையவே கிடையாது.

1,000 அல்லது 1,200 வெடிகுண்டு விமானங்களும் ஏக காலத்தில் கிளம்புவதாகவிருந்தாலும், 40 அல்லது 50 வெவ்வேறு விமானக் கூடங்களிலிருந்து கிளம்பி தான் ஒன்று சேருகின்றன. 20 அல்லது 30 நிமிஷ நேரம் ஒன்று பட்டிருந்து தாக்குகின்றன. இப்படிப்பட்ட பெரும் பெரும் விமானப் படைகள் இரவும் பகலும் இடைவிடாது கிளம்பி 72 மணி நேரம் வரையிலும் கூடப் போராடிக் கொண்டிருக்கின்றன வாகையால், "மூழ்கடிக்க முடியாத விமானந் தாங்கிக் கப்பல்" என்று அடிக்கடி சொல்லப்படுகின்ற. இங்கிலாந்தில், இன்னும் பல விமானக் கூடங்கள் அமைக்கவும் கூடும்.

ஏக காலத்தில் கூட்டத் தாக்குதல்.

மகா பெரியதும், மகா கனமுள்ளதுமான விமானங்கள் கிளம்பக் கூடிய விமானக் கூடங்கள் பிரிட்டனில் 400-க்குக் குறையாமலிருக்குமென்று சமீபத்தில் "டைம்ஸ்" பத்திரிகை குறிப்பிட்டது. அதாவது, அவசியம் நேர்ந்தால் ஏராளமான விமானங்களைக் கொண்ட 8 கூட்ட விமானங்கள் ஏக காலத்தில் இங்கிலாந்திலிருந்து கிளம்பலாம். அன்றியும், எதிர் காலத்தில் மேலும் முக்கியமான காரியமும் ஒன்றுண்டு. அதாவது, யுத்தம் முடிந்த பிறகு, சிவிலியன் விமானப் போக்கு வரவிற்கு பிரிட்டிஷ் தீவுகள் மிகவும் நன்கு அமைக்கப்பட்டனவாய் இருக்குமென்று அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். ஏனென்றால் நவீன முறையில் அமைக்கப்பட்ட விமானமிறங்கு மிடங்கள் பல, இங்கிலாந்திலிருக்கின்றன.

ஏராளமான ரோடுகள் போக்கு வரவு வசதிகள் அமைப்பதற்குச் சமதையாக, தற்கால விமானக் கூடங்கள் அமைப்பதையும் ஓரளவிற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். உத்தியோக முறையில் வெளியிடப்பட்டிருக்கும் புள்ளிகளைக் கொண்டு பார்த்தால், 16 கோடி சதுர கஜங்கள் தூரம் பிரிட்டிஷ் விமானக் கூடப் பாதைகள் 'காங்ரீட்' டினால் கட்டப்பட்டிருக்கின்றன. அதாவது 7½ மீட்டர் அகலமுள்ள 9,000 மைல் நீளமுள்ள ஒரு ரோடுக்கு இது சமம். இவை யெல்லாம் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே 61½ கோடி பவுன் செலவு செய்து கட்டப்பட்டவை. இந்த விமானக் கூடங்களில் 80 சத விகிதம் பிரிட்டிஷ் விமானப் படைகளுக்காகவும் மீதி 20 சத விகிதம் அமெரிக்க விமானப் படைகளுக்காகவும் கட்டப்பட்டன. ஏராளமான நிலப் பகுதியை இந்த விமானக் கூடங்கள் அடைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு சராசரி விமானக் கூடம் 2 முதல் 2½ சதுர மைல் பரப்புள்ள நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் ஒரு 'காங்ரீட்' ரோட் போகிறது. அதன் நீளம் 8 கிலோ மீட்டர். அகலம் 15 மீட்டர். இந்த ரோடுகளுக் குட்பட்டு சாதாரணமாக 3 இறங்கு துறைகள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று 1,800 மீட்டர். மற்றவை 1,150 மீட்டர் நீளம்.

சாதாரணப் பொருட்கள் ஏராளமாகத் தேவை

இப்போது விமான முன்னேற்றத்தின் போக்கைக் கொண்டு பார்த்தால், வெகு தூரம் காங்கிரீட் ரோட்டுகள் போடுவது மட்டும் பயன் படாது. "ஹாங்கர்ஸ்," காவற் கூடம், சீதோஷ்ண ஆராய்ச்சி நிலையங்கள், விடுதி வரிசைகள், உண்டிச்சாலைகள் முதலியன வெல்லாம் கட்டப்பட வேண்டும். பிரிட்டனில் விமானக் கூடங்களில் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்கள் ஏறக் குறைய 10 லட்சம் இருக்கும். இவற்றைக் கட்டுவதற்கு 1 கோடியே 80 லட்சம் கன அடி மாமும், 10 லட்சம் டன் எ.·.கும், அவற்றிற் கேற்ற வளவு மற்ற கட்டடச் சாமான்களும் செலவாயின. பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் 3,36,000 மைல்கள் நீளமுள்ள கனமான மின்சாரக் கம்பிகளையும், 7000 மின்சார "ட்ரான்ஸ்பார்மர்"களையும் உதவின. மற்ற பொருட்கள் 3 கோடி டன்களுக்குக் குறையவில்லை. இங்கிலாந்திலுள்ள பல பட்டணங்களில் வெடி குண்டுகள் விழுந்து சேதமான வீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட பல பொருட்களும் இதில் பயன்படுத்தப்பட்டன. இதுவும் ஒரு முக்கியமான காரியத்திற்கு உதவியது.

இங்கே ஏராளமான விமானக் கூடங்கள் இருப்பதனால், திடீரென்று விமானங்களில் எதிரிகள் வந்து தாக்குவதென்பது, முடியாத காரியம். அப்படியே ஜெர்மானியர்கள் விமானக் கூடங்களில் வந்து தாக்கியபோதிலும், இரண்டொரு விமானக் கூடங்களுக்குத் தான் சிறிது சேதமுண்டாக்கலாம். அதுவும் தற்காலிகச் சேதமாகத் தான் இருக்கும். என்றாலும் பிரிட்டிஷ் அமெரிக்க விமானப் படைகளின் தாக்கும் சக்தியைக் குறைக்க அவற்றால் முடியாது. நேசநாட்டுப் படைகள் ஐரோப்பாவில் போய் இறங்கும்போது, அவற்றிற்குத் துணையாகக் குடை பிடித்தது போல, நேச நாட்டு விமானங்களும் போகும். அச்சமயத்தில், பிரிட்டிஷ் விமானக் கூடங்களை ஜெர்மானியர்கள் தாக்கி, இந்த விமானங்கள் கிளம்ப ஒட்டாமற் செய்ய முயற்சிக்கக் கூடும். அப்போது முற் கூறியவை, மிகவும் உபயோகமாயிருக்கும். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு, இந்த முறை அவர்களுக்கு வெற்றியளித்திருக்கும். இன்றோ நிலைமை அப்படியில்லை. "மூழ்கடிக்க முடியாத விமானந் தாங்கிக் கப்பல்," அவ்வளவு பலமாக இருக்கிறது. அதன் தாக்கும் சக்தியைக் குலைக்க ஒருவராலும் முடியாது.

ராயல் இந்திய கப்பற் படையைச்சார்ந்த ஸ்திரீகள் அணிவகுத்துச் செல்லும் காட்சி.

ஜப்பானின் அக அழகும், முக அழகும்;

பழக்கவழக்கங்களும், மக்களின் மனப்பான்மையும்

“அகத்தினழகு முகத்தில் தெரியும்” என்பார்கள். ஆனால் ஜப்பான் விஷயத்தில் இந்த பழமொழியைச் சற்று மாற்ற வேண்டியிருக்கிறது. “முகத்தின் அழகினால் அகத்தின் ஒழுங்கை அறிய முடியாது” என்று சொன்னால் ஜப்பானுக்கு, முழுவதும் பொருந்தும். ஏனென்றால் ஜப்பான் மிக அழகிய நாடு; நவீன நாகரிகத்தில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்று. கொல்லாமையைக் குறிக் கோளாக கொண்ட கௌதம புத்தரைப் போற்றும் நாடு; காரிருளைப் போக்கி உலகத்துக்கு ஒளியும் களிப்புமளிக்கும் உதய சூரியனை வணங்கும் நாடு; வசந்த காலத்தில் அங்குள்ள மலர்களின் அழகையும், அழகின் அபரிமிதத்தையும் பார்த்தவர்கள், இந்திர லோகம் இதுதானோ என்று வியக்கும் படியான கவினுடைய நாடென்று ஜப்பானைப் புகழ்ந்திருக்கிறார்கள். மக்களிடத்திலே பழகும் தன்மை, நடந்து கொள்ளும் மரியாதை, ஒழுங்கு—இவைகளை எல்லாம் ஜப்பானில் நேரில் கண்டவர்கள் இவ்வளவு அன்பும் பணிவும் உள்ள மக்கள் உலகத்தில் வேறெந்த நாட்டில் இருக்கிறார்கள்! என்று ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல

இப்படியாக, அழகே ஒரு உருவெடுத்ததைப் போலத் தோன்றும் ஜப்பானின் இருதயம் எப்படிப்பட்டது; முக அழகுள்ள ஜப்பானின் அக அழகு எப்படியிருக்கிறது என்று பார்த்தால், மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்ற உண்மை, விளக்கமாகப் புலப்படும். நாகரிகமான அழகிய வர்ணக் கயிற்றை நாம் கையிலெடுக்கிறோம். அது ஒரு நாகப் பாம்பென்றுணர்ந்தால் நாம் என்ன செய்கிறோம்? உதறி எறிந்து அதை அறுத்து நாசம் செய்யப் பார்க்கிறோம். வர்ணப் பழுதையைப் போலிருக்கும் விஷப் பாம்புதான் ஜப்பான் என்பதை, சில கதைகளாலும், பல உண்மைச் சம்பவங்களாலும் தெரிந்து கொள்ளலாம்.

ஆதிசக்கிரவர்த்தியின் அக்கிரமம்

முதலில் ஜப்பானின், பழைய புராணங்களை எடுத்துக் கொள்வோம். இவையெல்லாம் கட்டுக் கதைகள். பல கடவுள்களால் ஜப்பான் உண்டாக்கப் பட்டதென்றும், அந்தக் கடவுள்களின் சந்ததிகள் தான் இப்போது சக்கிரவர்த்திகளாக ஜப்பானை ஆண்டு வந்து கொண்டிருக்கிறார்களென்றும், இந்த உயர்ந்த கடவுள் தன்மை ஜப்பானிய மக்கள் அனைவருக்கும் பரிணமித்துப் பாவியிருக்கிறதென்றும் அப்புராணங்கள் கூறுகின்றன. இதில் ஒரு “பரிசுத்த”க் கதையைக் குறிப்பிடலாம். இது ஆதி பரம்பொருள் சக்கிரவர்த்தியைப் பற்றியது. 2,600 வருஷங்களுக்கு முன் முதல் முதலாக ஜப்பானை ஆண்டவர் ஜிம்மு (Jimmu) என்ற சக்கிரவர்த்தி — அருமையான பெயர் தான்! அவர் ஒரு அருமையான காரியம் செய்தார். ஒரு நட்புரிமை விருந்துக்குத் தம்முடைய 80 எதிரிகளை அழைத்தார். அவர்களுக்கு 80 வேலைக்காரர்கள் உணவு பறிமாறினார்கள். ஜிம்மு குறிப்பிட்ட சைகை செய்தவுடன் ஒவ்வொரு வேலைக்காரனும் ஒவ்வொரு எதிரியை கத்தியால் குத்திக் கொன்று விட்டான். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. தம்முடைய மூதாதையான வீர புருஷன், தங்கள் நாட்டை முதலில் உண்டாக்கி ஆண்ட சக்கிரவர்த்தி என்று ஜிம்முவை ஜப்பானியர் கொண்டாடவில்லை. அவரை ஒரு கடவுளாகக் கொண்டாடுகிறார்கள்! அப்படிப்பட்ட கடவுளை வணங்குகிறவர்கள் எப்படிப் பட்டவர்களாயிருப்பார்கள் என்பதை விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை.

ஜப்பானியர் உயர்ந்தவர்கள் என்ற நினைவு

ஏதோ ஒவ்வொரு நாட்டிலும் புராணங்களும், கட்டுக் கதைகளும் இல்லாமலில்லை; அமெரிக்கர்கள் தங்களுடைய நாட்டை “கடவுளுடைய சொந்த நாடு” (“God's Own Country”) என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாக “கடவுளால் அரசர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமை” என்று ஏதேச்சாதிகாரம் மழுப்பப் பட்டது. அதெல்லாம் பழைய காலம். இப்போது நாம் இருப்பது இருபதாவது நூற்றாண்டு. இந்த இருபதாவது நூற்றாண்டில், ஜப்பானியர்கள், தாம் கடவுளிடத்திலிருந்து தோன்றிய சிறப்பான மனித வர்க்கம் என்று உண்மையாகவே நினைக்கிறார்கள். இதனால் மற்ற மனித வர்க்கங்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்றும், அதன் காரணமாக எல்லா மக்களையும் அடக்கியாளத் தங்களுக்கு உரிமையும் கடமையும் உண்டு என்றும் அவர்கள் நினைத்து அதன்படி நடந்து வருகிறார்கள்.

மும்மூர்த்திகளுக்கும் மேலானவராம் சக்கிரவர்த்தி

சரி, போகட்டும். சக்கிரவர்த்தியை கடவுளாக நினைத்து வழி படுபவர்கள் “ஷிண்டோயிஸ்ம்” என்ற மதத்தினர் மட்டும் தானே என்று நாம் நினைத்துவிடக் கூடாது. ஜப்பானில் பௌத்த மதத்தினர், கிறிஸ்தவர்கள், இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள்; அவர்கள் என்ன செய்கிறார்கள்? என்ன செய்வதாவது? எம் மதத்தினராயிருந்தாலும் சரி, சக்கிரவர்த்தி வழிபாட்டுக்குச் சம்மதப் பட்டுத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் பாடு அம்பலம் தான். உதாரணமாக, சில வருஷங்களுக்கு முன் ஒரு ஜப்பானிய கிறிஸ்தவ பாதிரி மாதா கோவிலில், ஒரு அறிவுறுத்துப் பிரசங்கம் செய்தார். அதில் மும்மூர்த்தி என்ற கிறிஸ்தவக் கொள்கையோடு ஜப்பானிய சக்கிரவர்த்தியையும் சேர்த்து, கடவுள் அம்சத்தை நான்கு என்று குறிப்பிட்டார். அதில் ஜப்பானிய சக்கிரவர்த்தியைக் கடவுள் முதல் அம்சமாகவும் குறிப்பிட்டார். இருந்த போதிலும் மும்மூர்த்திகளுக்குச் சமானமாக சக்கிரவர்த்தியைக் குறிப்பிட்டு அவரை அவமதித்ததற்காக பாதிரியார் கடுமையாக நிந்திக்கப்பட்டார்.

சக்கரவர்த்தி பவனி அலங்கோலம்

சக்கிரவர்த்தியைக் கடவுளுக்குச் சமானமாக ஜப்பானியர்கள் கருத வேண்டும் என்ற விதி மற்றொரு பழக்க வழக்கத்திலிருந்து தெரிகிறது. ஒவ்வொரு சமயத்தில் ஜப்பானிய சக்கிரவர்த்தி தம்முடைய மாளிகையை விட்டு வெளியேறி டோக்கியோவின் தெருக்களில் செல்வார். அப்போது மெத்தை வீடுகளில் உள்ள ஜன்னல்களெல்லாம் மறைப்புத் துணியால் மூடப்பட வேண்டும். மேன்மாடிகளிலிருந்து யாரும் அவரைப் பார்க்கக் கூடாது. மேலிருந்து கொண்டு கீழே பார்ப்பதால், கடவுளாகிய சக்கிரவர்த்தியை அவமதிப்பதாகுமாம்; இது மாத்திரமல்ல. தரை மட்டத்திலிருந்து கூட அவரைப் பார்ப்பது தவறென்று கருதப் படுகிறது. ஆகையால் அவர் போகும் போது, எல்லோரும் தலை குனிந்து கொண்டே இருக்க வேண்டும்.

சுதந்தர வாழ்வே கிடையாது

பொதுவாக, எல்லா விஷயங்களிலும் ஜப்பானியர் சட்ட திட்டக் கட்டுப் பாட்டுக்குள் அடங்கி நடக்க வேண்டும். பிறந்தது முதல் இறக்கும் வரையில், அவர்களுடைய வாழ்க்கையில் சுதந்திரமாவது, சுயேச்சையாவது கிடையாது. சில நூற்றாண்டுகளுக்கு முன், தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஜப்பானில் ஒரு சட்டம் ஏற்பட்டிருந்தது. ஒரு குடியானவனை எடுத்துக் கொள்வோம். அவன் எவ்வளவு அளவுள்ள வீடுகட்ட வேண்டும்; எந்த மாதிரி கட்ட வேண்டும்; அவனும் அவனுடைய குடும்பத்தாரும் சாப்பிடும் உணவு எவ்வளவிருக்க வேண்டும்; அவன் எப்படிப் பட்ட ஆடைகளை அணிய வேண்டும்; கலியாண விருந்து விசேஷங்களில் என்னென்ன பலகார பட்சணங்கள் செய்ய வேண்டும்; குழந்தைகளுக்கு எப்படிப் பட்ட விளையாட்டுச் சாமான்களைக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட எல்லா விஷயங்களுக்கும் விரிவான சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. தங்களுக்கு உயர்வாய் உள்ளவர்களை எந்தெந்த மாதிரி கூப்பிட வேண்டும் என்பதற்கும் விதிகள் அமைக்கப்பட்டிருந்தன. உயர்வாய் இருப்பவர்களை அழைப்பதில் ஏதேனும் தவறு நேர்ந்தால், தவறு செய்தவர்களுக்கு மரண தண்டனை கூடக் கொடுக்கலாம் என்று சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட பண்டைக் கால பழக்க வழக்கங்கள் நாகரிக மடைந்ததாகச் சொல்லிக் கொள்ளும் ஜப்பானியரிடம்

இன்றைக்கும் இருந்து வருகின்றன என்ருல், அவர்களுடைய மனப்பான்மையைப் பற்றி என்ன சொல்வது? எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த மாதிரியாக உயர்ந்தவர்களிடத்திலும், தாழ்ந்தவர்களிடத்திலும், பேச வேண்டும் என்பதைப் பற்றிய விதிகளை ஜப்பானியச் சிறுவர்களும் சிறுமிகளும் மனப்பாடம்செய்து கொண்டு வர வேண்டும். இதனால், ஜப்பானியர்களுடைய மரியாதையும், பணிவும், மனப்பாடம் செய்யப்பட்ட மரியாதையும், பணிவும் தவிர, வேறல்ல என்று விளங்குகிறது. சில சமயங்களில் விதிகளில் குறிப்பிடாத சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. அப்போது, ஜப்பானியர்கள் முரட்டுத்தனமாகவும், மரியாதைக் குறைவாகவும் பேசி விடுகிருர்கள். "சொன்னதைச் சொல்லுமாம் கிளிப் பிள்ளை" என்றபடி, சொல்லிக் கொடுத்ததையே திருப்பிச் சொல்லுவதற்கு அவர்கள் பழக்கப்பட்டு வருகிருர்கள். அதனால் தான், சொல்லிக் கொடுக்காத விஷயங்களில் அவர்கள் தவறு செய்கிருர்கள். "கற்றுக் கொடுத்த சொல்லும், கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்கு வரும்?" என்பது நம் நாட்டுப் பழமொழி. இதனுடைய உண்மை ஜப்பான் ஆக்கிரமித்துக் கைப்பற்றிய நாடுகளில் நன்ருகத் தெரிகிறது. அந்த நாட்டு மக்களிடம் ஜப்பானியர் யாதொரு காரணமுமில்லாமல் முரட்டுத் தனமாகவும், மரியாதைக் குறைவாகவும் நடந்து கொள்ளுகிருர்கள். ஏனென்ருல், அவர்களுடைய ஒழுங்கு விதிப்புத்தகம் இந்தப் புதிய நிலைமைக்கு வழி ஏற்படுத்தவில்லை. அதனால் அவர்கள் நடந்து கொள்ளும் முறை தெரியவில்லை. கண் மூடித்தனமாக விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு ஜப்பானியர் பழக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அறிவை உபயோகப்படுத்துவதற்கு அவகாசமோ, பயிற்சியோ கிடையாது.

இப்படி இருக்கும் போது, அவர்களுக்குப் பரந்த நோக்கமும், அகில தேசிய மனப்பான்மையும் எப்படி யிருக்க முடியும்? பரந்த நோக்கம் ஜப்பானிய சட்டத்துக்கே விரோதம். மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதைப் பற்றிய விஷயங்களை ஆராய்ச்சி செய்தால், பகுத்தறிவை உபயோகித்து விஷயாதிகளின் உண்மையை உணர்தல், முதலியன "அபாயகரமான எண்ணங்கள்" என்று ஜப்பானியரால் கருதப்படுகின்றன. அப்படிச் செய்வது பல வருஷங்களாக ஜப்பானிய சட்டத்துக்கும் புறம்பானது.

உதாரணமாக, 1925-ம் வருஷம் "சமாதானத்தை நிலை நிறுத்தும் சட்டம்" ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய முதலாவது பிரிவைப் பற்றி மாத்திரம் இப்போது குறிப்பிடலாம். அதன்படி, ஜப்பானிய அரசாங்கக் கொள்கையை மாற்றுவதற்கு யாராவது முயன்ருல்; அல்லது பிரத்தியேகமான சொந்த சொத்து முறையைத் திருத்த யத்தனித்தால், அவர்களுக்கு நீண்ட கால சிறைத் தண்டனை விதிக்கப்படும். 1928-ம் வருஷத்தில் இதற்கு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அரசாங்கக் கொள்கையை மாற்ற முயலுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்த அக்கிரமச் சட்டத்தின் கீழ், ஜப்பானில் உள்ள பிரபல ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், பரந்த நோக்கங் கொண்ட மாணவர்கள் முதலியவர்கள் பலர் கொல்லப்பட்டார்கள்.

இப்படிக் கடவுளின் தன்மையை அதிகப்படியாக உடையதாகக் கொள்ளும் ஜப்பானியர்கள் தங்களுடைய நாட்டு மக்களையே கொலை செய்கிருர்களென்ருல், ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? 1910-ம் வருஷம் கொரியாவை அவர்கள் கைப்பற்றிய நாள் முதல், இன்று வரை அவர்கள் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் நாடுகளில் செய்துவந்த அக்கிரமங்கள் அவர்களுடைய உண்மை மனப் பான்மையைக் காட்டுகிறது.

ஜப்பானியருடைய வாழ்க்கையில் அவர்களுடைய நாட்டின் அழகும் கொடூரமும் நன்ருகப் பிரதிபலிக்கின்றன. ஜப்பானியர் அழகிய மலர்களை விரும்புகிருர்கள்; பிரகாசித்து ஓடும் ஆறுகளைக் கண்டால் அவர்களுக்கு அதிகப் பிரியம். நுட்பமான அழகுடைய பொருள்களைச் செய்வதில் அவர்களுக்குத் தனி இன்பம். ஆனல் 1923-ம் வருஷம் ஏற்பட்ட பூகம்பத்தில், அவர்களுடைய அடிப்படையான சுயரூபத்தைக் காட்டினுர்கள். ஜப்பானில் வசித்திருந்த 4,000 சீனர்களையும், கொரியா தேசத்தார்களையும் தாக்கிக் கொன்ருர்கள்.

ஜப்பான் எரிமலை நாடு. பூகம்ப நாடு. இயற்கையில் கொடூரம் அந்நாட்டு மக்களிடத்தில் ஆழ்ந்து வேரூன்றியிருக்கிறது. எரிமலையின் புறத்தைப் பார்த்தால் மிக அழகாகத் தான் இருக்கும்; ஆனல் அதன் அடிப்படையான இருதயத்தில் நெருப்பும், புகையும், சதா தாண்டவமாடிக் கொண்டிருக்கும். சமயம் ஏற்பட்ட காலத்தில் அவை வெளிக் கிளம்பி நாட்டு மக்களை அழிக்கும். இந்தக் கொடூர குணத்தை ஜப்பானியர் மிக நன்ருகக் காட்டிவிட்டார்கள். ஒரு காலத்தில் அவர்கள் உலக நாகரீக முற்போக்கைக் கவனித்து, தங்களுடைய நாட்டை முன்னேறும்படி செய்தார்கள். ஆனல் இப்போது உலக நாகரிகத்தையே ஆதிக்கப் பேராசை நெருப்பால் அழிக்க முயலுகிருர்கள். அவர்களுடைய அகமும் புறமும் ஒன்றுக் கொன்று மாறுபாடானவை; முரண்பாடானவை; "அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை" என்றபடி ஜப்பானியர் பழக்க வழக்கங்களையும், நடைமுறை பாவனைகளையும் நடந்து வரும் விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்தால், உலக ஏமாற்றங்களுள் ஜப்பான் ஒரு பெரிய ஏமாற்றம் என்பது நன்ருகப் புலப்படும்.

—திரு டி. ஏ. வி. நாதன், மதராஸ் அகில இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து ஒலி பரப்பிய பிரசங்கம்.

ஜப்பானியர்கள் தவிடு பொடி

தென்னிந்திய பீரங்கிப் படையின் வீரம்

தென்னிந்திய பீரங்கிப் படை வட மேற்கு மாகாணத்தில் சுமார் ஒரு வருஷத்திற்கு முன்னதாக அமைக்கப்பட்டது. அது இப்போது அரக்கான் போர் முனையில் தாக்குதல் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டிருக்கிறது.

தென்னிந்திய பீரங்கிப் படையினர் தம் 25 பவுண்டர் பீரங்கிகளைக் கையாண்டுகொண்டு, 45 நிமிஷ நேரம் நடைபெற்ற படைத் திரட்டுதலில் கலந்து கொண்டதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்த பீரங்கி அமைப்பாளர் கன்னர் தணிகாசலம். இவர் ஒரு இந்தியக் கிருஸ்துவர். சென்னைவாசி. இவர் படையில் சேரும் போது, பெருக்கும் வேலைக்கு நியமிக்கப்பட்டார். அவர் கன்னர் பதவி பெற்ற போது அவர் இருந்த சுருசுருப்பைக் கொண்டு, பீரங்கி அமைப்பாளர் பதவியும் அவருக்குக் கிடைத்தது. பீரங்கிப் படையிலேயே இது மகா முக்கியமான வேலை.

வடமேற்கு மாகாணத்தில், பிற படைகளிலிருந்து நீக்கப்பட்டவர்களைக் கொண்டும், கமிஷன் பெருத சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களைக் கொண்டும் தான் இந்தப் படை தோன்றியது. முதன் முதலாக சென்ற ஜனவரி மாதம் 20-ம் தேதி தான் போராட்டத்திற் புகுந்தது. முன்னணிக் காலாட் படைக்கு ஆதரவாகக் கொஞ்சமும் தளர்ச்சியில்லாமல் தன் வேலையைச் செய்து கொண்டு வருகிறது.

பீரங்கிப் படைகளில் கமிஷன் பெருத பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் முதல்தாமானவர்களா யிருக்கிருர்கள். நான் கவனித்துக் கொண்டிருந்த பீரங்கிக்கோஷ்டியின் தலைவர் சார்ஜெண்ட் ஜி. டி. எம். டெனிஸன். இவர் மிடில் செக்ஸ் வாசி. இந்தப் பீரங்கிப் படையைச் சேர்ந்தவர்களின் பெயர்களை உச்சரிப்பதுங்கூட மிகவும் கஷ்டம். அவற்றை நன்ருக உச்சரிக்கக் கற்றுக் கொண்டார். அவர்கள் திறமையோடு வேலை செய்வதற்குச் சிறந்த முறையில் அவர்களுக்குப் பயிற்சி யளித்திருந்தார்.

இவர்களில் பெரும்பான்மையோர் சென்னை மாகாணத்திலும், திருவாங்கூர் சமஸ்தானத்திலுமுள்ள கிராமவாசிகள். இவர்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசுகிருர்கள்.

மகனுக்குத் தந்தை செய்த உபதேசம்

இரண்டு வருடங்களில் காப்டன் பதவி

ஆன்ட்ரு உம்னிகோப் இராணுவ வாழ்க்கை

ஓரெல், ரஷ்யாவின் ஒரு பகுதி. அங்கே வெசிலோப்கா என்றொரு சிற்றூர். அதில் ஒரு குடியானவன். இளைஞன். அவனுடைய ஆசை யெல்லாம் செம்படையில் சேர வேண்டுமென்பதே. 1937-ம் வருஷம் அவனது ஆசை நிறைவேறியது. செம்படையில் சேரும்படி அவனுக்குக் கட்டளை பிறந்தது.

இவன் சிறுவனு யிருக்கும்போது பள்ளிக்கூடத்தில் தன் பாடங்களை மிகவும் ஊக்கத்துடன் பயின்று வந்தான். கடுமையான உடற் பயிற்சியும் பெற்றிருந்தான். இராக் காலங்களில் இராணுவ முறைப்படி நெடுந்தூரம் போய் வருவது வழக்கம். போலிப் போர்கள் நடத்துவதுண்டு. ஆன்ட்ரு உம்னிகோப் பொறுமையே உருவாய் அமைந்தவன். என்றாலும் யுத்தக் கலையில் தலை சிறந்து விளங்க வேண்டு மென்னும் ஆசை அவனை உந்தியது. சுபொரோபின் நல்லுரைகளே தன் நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ள உதவுபவை என்னும் உறுதி கொண்டான்.

" கஷ்டப்பட்டுப் படித்தால், போர் முனையில் போராட இலகுவா யிருக்கும் " என்பது தான் அந்த நல்லுரை.

லெப்டினெண்ட் பதவி

ஜுன் மாதம் 18-ம் தேதி போர் ஆரம்பமானது. அப்போது லெப்டினெண்ட் ஆன்ட்ரு உம்னிகோப் ஒரு பெரிய டாங்கிப் பட்டாளத்திற்குத் தலைவராகப் போர் முனைக்குப் போனுர்.

இனி கடுமையான காலம். மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும். இந்த இளம் படைத் தலைவன் சில இடங்களில் தோல்வியின் தொல்லைகளுக்கும் ஆளானுன். பிறகு, செம்படைகள் மகா உக்கிரமாகவும் முழு மூச்சாகவும் எதிரிகளைத் தாக்கி யடைந்த வெற்றிகளிலும் பங்கு கொண்டான்.

ஹிட்லருடைய படைகள் தன் நாட்டினருக்கு இழைத்துள்ள தீங்குகளைக் கண்டான். தன் நாட்டின் பல பட்டணங்களும் சிற்றூர்களும் தரை மட்டமாகிக் கிடந்தன. பொது மக்களின் பிணங்கள் பனியினுல் உறைந்து போய்க் கிடந்தன. டாங்கி எதிர்ப்புக் குழிகளிலெல்லாம், முதியவர்களும் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டுக் கிடந்தார்கள். இவர்கள் மகா கொடுமையாகக்கொல்லப்பட்டார்களென்பதற்குரிய அறிகுறிகள் காணப்பட்டன. இவற்றைக் கண்ட யாருடைய மனந் தான் சகிக்கும்? ஆகவே இந்த நாஜிக் கொலைகாரர்களையும் கொடியர்களையும் பழி வாங்கியே தீரவேண்டும் என்னும் உணர்ச்சி வீறு கொண்டெழுந்தது ஒரு வியப்பல்ல.

" மேலும் மேலும் அவர்களைக் கொன்று, நம் நாட்டை மீட்கும் பொருட்டு தான் நான் உயிர் வாழ்ந்து வருகிறேன் " என்று லெப்டினெண்ட் ஆன்ட்ரு உம்னிகோப் கூறினுர்.

1942-43-ம் வருஷம் மழை காலத்தில் போல்கோப் ஜில்லாவைச் சேர்ந்த, தன் சொந்த ஊராகிய ஓரெல் பகுதிக் கருகில் உம்னிகோப் போராடிக் கொண்டிருந்தார். அப்போது அவர் இரண்டு எதிரி டாங்கிகளை நாசஞ் செய்தார். எதிரிகள் பதுங்குமிடங்கள் பலவற்றையும் அகழிகளையும் அழித்தார். நூற்றுக் கணக்கான ஜெர்மன் உத்தியோகஸ்தர்களையும் படையினரையும் கொன்று குவித்தார். ஆகவே, அவருக்குச் செங்கொடிப் பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது.

சாம்பலாகியும் புகைந்து கொண்டும் தரை மட்ட மாகியும் கிடந்த தன் ஓரெல் பகுதியை மீட்ட லெப்டினெண்ட் உம்னிகோப், தன் மனமொழி மெய்யால் எதிரிகளை வெறுக்கத் தலைப்பட்டார். அவர் வெற்றிக்கு அவருடைய உள்ளத்தே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் நாஜி வெறுப்புத் தான் காரணமா யிருந்தது.

1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் டன்பாசில் மகா கடுமையாகப் போர் நடந்து கொண்டிருந்தது. அப்போது லெப்டினெண்ட் ஆன்ட்ரு உம்னிகோப்பின் படைகள் க்ரமடார்ஸ்க்குக்கு அருகில் போராடிக் கொண்டிருந்தன. எதிரிப் படைகளுக்குப் பின்புர மிருந்து 3 டாங்கிகளுடன் எதிரிப் படைகளைப் பிளந்து கொண்டு உட்புகும்படி, அவருக்குக் கட்டளை பிறந்தது. இந்த டாங்கிப் படையினர், எதிரிகளின் பாதுகாப்பரண்களைக் கடந்து உட்புகுந்து விட்டனர்.

நெருக்கடியான நிலைமை

ஸ்டாலினே பகுதியின் கிராமங்களில் ஒன்று, பெரு வழியின் மீதிருக்கிறது. எதிரிப் படைகளை ரஷ்ய டாங்கிப் படையினர் நேருக்கு நேர் சந்தித்து விட்டார்கள். அந்த நிலைமை பற்றி, லெப்டினெண்ட் ஆன்ட்ரு உம்னிகோப் கூறியதாவது :—

ஆலோசிப்பதற்குக் கூட நேரமில்லை. திரும்பிப் போவ தென்பது முடியாத காரியம். அன்றியும் எங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டும். ஆகவே, எதிரிகளின் எண்ணிக்கை வெகு அதிகமா யிருந்த போதிலும், போராடத் தான் வேண்டு மென்று முடிவு செய்து விட்டேன். " போர் முனையில் கருதப்பட வேண்டியது எதிரியின் எண்ணிக்கையல்ல, திறமைதான் " என்று சொவொரோப் கூறியுள்ள நல்லுரை என் ஞாபகத்திற்கு வந்தது.

மறு நாள் அதி காலையில் உதவிப் படைகள் வந்து சேர்ந்தன. போர்க் களத்தில் 20 பீரங்கிகளும், 50 லாரிகளும் சேதப்பட்டும் கைவிடப்பட்டும் கிடந்தன. அன்றியும் நாஜி படைத் தலைவர்களும் படையினரும் சுமார் 500 பேர்கள் மாண்டு கிடந்தார்கள். அன்றியும் அந்தப் படை உத்தியோகஸ்தரிட மிருந்து முக்கியமான சில தஸ்தாவேஜுகளை லெப்டினெண்ட் ஆன்ட்ரு உம்னிகோப் கைப்பற்றிக் கொண்டார். இந்தப் போராட்டத்திற்கு பிறகு அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினுர்கள். ஆனுல் சில நாட்களுக்குப் பிறகு, மீண்டும் தன் படைககு ஓடி வந்து விட்டார்.

1943-ம் வருஷம் எப்ரல் மாதம் 17-ம் தேதி, தம்மை முன்னேறித் தாக்கிக் கொண்டு வரும் ஜெர்மன் படைகளோடு முன்னணியிலிருந்து படைத் தலைவரின் கட்டளைப்படிப் போராடி பிறா பின்பற்றத் தக்க முறையில் வீரத் தோடும் பலத்தோடும் போராடினுர். அதன் பயனுக, " சோவியத் யூனியன் வீரர் " என்னும் சிறப்புப் பட்டம் அவருக்குக் கிடைத்தது. " காப்டன் " பதவிக்கும் அவர் உயர்ந்தார்.

தந்தையின் உபதேசம்

1943-ம் வருஷம் கோடை காலத்தில் இவர் தன் சொந்த ஊருக்கு அருகில், எதிரிகளோடு போராடிக் கொண்டிருந்தார். க்ராம், சேப்ஸ்க் ஜில்லாக்களில் நடை பெற்ற போரில், இவர் கலந்து கொண்டார். இந்தப் பகுதியில் இவருடைய மூன்று சகோதரர்களும் கூடப் போராடினுர்கள்.

ஒரு சிறு படையின் இளந் தலைவராகப் பண்டயில் சேர்ந்த இவர், இரண்டு வருஷங்களில் அச்சமென்பதே யறியாத அனுபவ மிக்க சோவியத் உத்தியோகஸ்தராகி விட்டார்.

பிறகு இவர் தன் சொந்த ஊருக்கு, விடுமுறை பெற்றுத் திரும்பினுர். தந்தையைக் கண்டார். இவ்வீரரின் தந்தை பழைய பீரங்கிப் படையைச் சேர்ந்திருந்தவர். இரண்டு யுத்தங்களைக் கண்டவர். (1) ரஷ்ய ஜப்பான் யுத்தம், (2) முதல் மகா யுத்தம். பெருமிதத்தோடு தன் மகனைப் பார்த்து " அப்பா! மகனே! உன்னுல் உன் குடும்பத்திற்கோ, ஓரெல் பகுதியினருக்கோ நீ கேவல மொன்றும் தேடி விடவில்லை; நாங்கள் 1914-ம் வருஷம் ஜெர்மானியர்களோடு போராடினேம்; அவர்களை அடியோடு ஒழிக்க வேண்டியது உன்னுடைய வேலை; அப்போது தான் அவர்கள் இனி ரஷ்யாவிலேயே கால் வைக்க வேண்டு மென்று நினைக்கக் கூட மாட்டார்கள்."

தன் தந்தையின் அற வுரையை நிறைவேற்றும் பொருட்டு காப்டன் ஆன்ட்ரு போர் முனையின் முன்னணியிலிருந்து தன்னுலான வரை முயன்று கொண்டிருக்கிறுர்.

இந்த மந்த மேன்?

காஸினோ விஷயம்

காஸினோ நகர்வரை வெகு ஜோராகப் போய்க் கொண்டிருந்தது ஐந்தாவது சேனை. காஸினோவில் பயங்கரமான போர் நடந்தது. காஸினோ நகரம் பாழாயிற்று. அதோடு நின்று விட்டது அத்திசையில் முன்னேற்றம்.

அன்ஸியோ கடற்கரையில் நேசதேசப் படைகள் போய் இறங்கின. சரி! ஜெர்மன் சைனியம் பின்னால் துண்டிக்கப் படப்போகிறது; மளமள வென நேசப் படைகள் முன்னேறிச் சென்று ரோம் நகரைக் கைப்பற்றப் போகின்றன; அப்புறம் இத்தாலியச் சண்டையே நின்று விடலாம் என்று எல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்தப் பிரதேசத்தில் இறங்கிய நேசப் படைகளை, ஜெர்மன் படைகள் கடுமையாக எதிர்த்தன. நேசப் படைகளைக் கடலிலே கொண்டு தள்ளிவிட வேண்டுமென்று ஜெர்மானியர் ஆசைப்பட்டனர். அவ்வாறு செய்யவும் முற்பட்டனர். ஆனால் அவர்களுடைய ஆசை நிராசையாகிவிட்டது. சௌகரியமான மலை உச்சிகள் எல்லாம் ஜெர்மானியர் வசமிருந்தன. அங்கிருந்து அன்ஸியோ கடற்கரைப் பிரதேசங்களை ஜெர்மானியர் சுட்டுத் தள்ள முயன்றார்கள்.

உடும்புப் பிடி

ஜெர்மானியர் என்ன செய்தும் நேசதேசப் படைகள் தளரவில்லை. அந்தப் பிரதேசத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு விட்டன. அன்ஸியோ பிரதேசத்திலே நேசதேசத்தாரும் பின் வாங்கவில்லை. ஜெர்மானியரும் முன்னேற முடியவில்லை. இரு தரப்பினரும் வேவு கோஷ்டிகளை அனுப்பிக் கொண்டு, திருப்தியடையவேண்டிய விசித்திர நிலைமை ஏற்பட்டது.

ஜெர்மானியர் இந்தப் போர் முனையில் நேசதேச முன்னேற்றத்தைத் தடை செய்து நிறுத்த, ஏகப்பட்ட ஆட்களையும், ஆயுதங்களையும் காவுகொடுக்க வேண்டி வந்தது. இதற்காக ருஷ்யப் போர் முனையிலிருந்தும், மேற்கு ஐரோப்பாவிலிருந்தும் புதுப்படைகளை நிறையக் கொண்டுவர நேர்ந்தது. இத்தாலியிலே நேசப் படைகள் வேகமாக முன்னேறவில்லை என்பதால், ஜெர்மானியர் சந்தோஷமடைந்து சதிர்க்கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கவில்லை.

ஜெர்மானியரின் ஏற்பாடுகள்

ரோம் நகரைப் பலப்படுத்தவும், காஸினோ அருகிலேயே ஒரு ஹிட்லர் பாதுகாப்பு அரணை எழுப்பவும் அவர்கள் முனைந்து வேலை செய்துகொண்டேயிருந்தனர். நேச தேசத்தார் தங்களைச் சும்மா விடமாட்டார்கள்; மேலும் மேலும் அவர்களுக்கு மத்யதரைக் கடல் பக்கத்திலிருந்து உதவி வந்துகொண்டிருக்கிறது என்பது (ஜெர்மானியருக்குத்) தெரியாதா என்ன? திடீரென்று நேசப் படைகள் வட இத்தாலியிலேயும் போய் இறங்கக் கூடும் என்ற பீதியும் அவர்களுக்கு இருந்தது. ஆனால் இத்தாலியிலேயே போர் மந்த நிலைமையை அடைந்தது.

ருஷ்யாவிலேயும்!

ருஷ்யாவிலேயும் எதிர் பார்த்ததெல்லாம் நடக்கவில்லை. ருஷ்யப் படைகள் வாயுவேக, மனோவேகத்தில் ஜெர்மானியரைத் துரத்திக் கொண்டு சென்றன அல்லவா? ஒரு புறம் ருமேனியாவிற்குள் ஒரு படை பாய்ந்தது. கார்ப்பேதியன் மலைப் பிரதேசங்களில் மற்றொரு படை புகுந்தடித்தது. வடக்கே ஒரு படை எஸ்தோனியா, லிதுவேனியா பிரதேசங்களில் வெற்றிமேல் வெற்றியாக வாரிக் கட்டிக் கொண்டிருந்தது. தெற்கே கிரைமியாவிலே, எலிபோல் எண்ணற்ற நாஜிகளை ஒரு மூலையில் சிக்கவைத்து ருஷ்யர்கள் ஹதம் செய்யலாயினர். செபாஸ்டபோல் நகர், திருஷ்டியில் படும் தூரத்தை ருஷ்யர்கள் அடைந்தனர். பெரிய பீரங்கிகளைச் சுமந்து வந்து நிறுத்தினர். சுட்டனர். குண்டுகள் வீசினர். செபாஸ்டபோல் நகரம் அக்னி தேவனின் ஆனந்தத் தாண்டவத்திற்கு இலக்காயிற்று. பல நாஜி அதிகாரிகள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள விமானங்கள் மூலம் அங்கிருந்து பறந்தோடினர். பல கப்பல்கள் ஏராளமான பேர்களை ஏற்றிக் கொண்டு, கருங் கடல் வழியாகத் தப்ப முயன்றன. அவற்றில் சென்றவர்கள் தண்ணீரிலே மிதந்து செல்லும் காகிதத்தை நம்பி, அதன் மீது அங்கு மிங்கும் ஓடும் எறும்புக் கூட்டத்தைப் போல, திடீர் திடீர் என்று ருஷ்ய நீர்மூழ்கிகள், விமானங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஜலத்தில் கப்பலோடு மூழ்கி மாண்டனர். இவ்வளவு தூரம் இங்கு சண்டை முற்றிய பிறகு இங்கும் ஒரு மந்தம் ஏற்பட்டது.

அஸ்ஸாம் முனையிலும் மந்தம்

இங்கே இந்தியாவில் உள்ள அஸ்ஸாம்–பர்மா போர் முனையை எடுததுக் கொள்ளுங்களேன். ஜப்பானியர் திறந்த வீட்டில் புகும் நாய் போல, தடதடவென்று இந்தியாவிற்குள் புகுந்தார்கள். இம்பாலுக்குச் செல்லும் ரஸ்தாவிலும், இம்பாலி லிருந்து போகும் பாதையிலும் அவர்கள் சில வெற்றிகளைக் கண்டார்கள். இம்பாலை, நாலா புறங்களிலும் துண்டித்து விட முயன்றார்கள். இம்பாலுக்கு மேற்கே பிஷன்பூர் பக்கம் வாலை ஆட்டினார்கள். வடக்கே கொஹிமாவைச் சூழ்ந்து கொண்டார்கள். கொஹிமாவிலிருந்து திமாபூர் என்ற முக்யமான இடத்திற்குப் போகும் பாதையிலே குறுக்கே போய் நின்று கொண்டார்கள். கொஹிமா கிராமத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். டாங்கிகளைக் கொண்டு வந்தார்கள். விமானத்திலும் பறந்து வந்தார்கள். மேலும் மேலும் படைகளைக் கொண்டு வந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். நேசப் படைகளோ ஜப்பானியரைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொஹிமாவில் சூழப்பட்ட இந்திய, பிரிட்டிஷ் படைகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டனர். திமாபூரிலிருந்து வரும் ரஸ்தாவில் இருந்த தடைகளை ஒவ்வொன்றாக அகற்றிக் கொண்டனர். இம்பாலை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆகாயத்திலே ஜப்பானியக் குள்ளன் அட்டகாசம் செய்யாது அடித்து விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு நடந்து கொண்டிருக்கும் பொழுது இந்தப் போர் முனையிலும் நடுவிலே திடீரென ஒரு மந்தம் ஏற்பட்டிருப்பதாக ஒரு சேதி வந்தது. இவ்வாறாக எங்குமே இந்த சமயத்தில் மந்தம் ஏற்பட்டிருப்பதேன்? இது ரொம்ப மோசமான வியாதி ஆயிற்றே! 'இவ்வாறு மந்தமேற்படுவதால, யுத்தம் அவ்வளவுக் கவ்வளவு நீடிப்பது போலாகி விடாதா?' என்று நீங்கள் நினைக்கலாம்.

காரணம் என்ன?

இதற் கெல்லாம் காரணங்கள் உண்டு. போரில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தான் இதன் அர்த்தம் என்ன என்பது தெரியும். போர் என்றால், நில்லாமலே ஓடிக் கொண்டிருக்கும் எக்ஸ்பிரஸ் வண்டிப் பிரயாணம் போல் அல்ல. அமெரிக்காவிலே ஐநூறு மைல்களுக்கு ஒரு தரம் தான் ஒரு வேகமான ரயில் வண்டி நிற்கிறதாம். பார்த்தீர்களா? எவ்வளவு தூரம் ஓடினாலும் ஒரு இடத்தில் நின்று தானாகவேணும் அது. ஓடிக் கொண்டிருக்கும் பொழுதே, தண்டவாளங்களுக்கிடையில் தோண்டப் பெற்றுள்ள குழிகளில் நிரம்பி யிருக்கும் ஜலத்தை எஞ்சின் உருஞ்சி எடுத்துக் கொள்ளலாம். நகரும் பிளாட்பாரங்களில் உள்ள ஜனங்களை ஏற்றி இறக்கிக் கொண்டு போகலாம். ஆனாலும் அது ஐநூறு மைல்களுக் கொருதடவையாவது நிற்கத்தான் செய்கிறது. சும்மா ஓடிக் கொண்டே யிருந்தால், சக்கரங்கள் கொதித்து விடாதா? யந்திர பாகங்களுக்கும் கொஞ்சம் ஓய்வு கொடுக்க வேண்டாமா? தடதடா, தடதடா என்ற சப்தம் இல்லாது ரயிலில் உள்ளவர்கள் கொஞ்சமாவது நிம்மதியாக இருக்க வேண்டாமா? எஞ்சினுக்கு வேண்டிய சில சாமான்களை எங்கேயாவது நின்று போட்டுக் கொள்ள வேண்டாமா? அதிகப்படி சேர்ந்திருக்கும் நீராவியை வெளியிலே விடவேண்டாமா? ரயில் ஓடுவது ஆட்களுக்காகத் தானே? அவர்கள் எல்லோருமே இரண்டாயிரம் மைல்களுக் கப்பால் உள்ளதொரு நகரத்திற்கே போவோராக இருக்க முடியுமா என்ன? இத்தனையையும் உத்தேசித்து அந்த ரயில்கள் வெகு தூரத்திற் கொருதடவையாவது நின்று விட்டுத்தானே போகின்றன?

அதே போல, போரரங்கத்திலே, படைகள் சும்மா முன்னேறிக் கொண்டே இருப்பதென்பது அசாத்தியம். இப்பொழுதே, அவ்வப்போது வரும் திடீர் மரணச் சேதிகளை தினசரிகளில் படித்திருப்பீர்களே? 'ஊரிலிருந்து வரும் பொழுதே, ரயிலில் மார்படைத்து மரணமடைந்தார்' என்றது போன்ற சேதிகளைப் படித்திருப்பீர்களே! அப்படியிருக்க, ராணுவத்திலே, முதலில் புறப்பட்டபோதிருந்த எண்ணிக்கை அப்படியே முனை முறியாது கடைசிவரை இருக்குமா என்ன?

எதிர்பாராதவை

போர் முனையில் உள்ளவர்கள் எவ்வளவு வீரத்தோடு போர் புரிந்தாலும் சரி, எதிரிகளை எவ்வளவு விரட்டி ஓட்டினலும் சரி, அவர்களுக்கு எவ்வளவு பலமிருந்தாலும் சரி, ஆள் சேதமோ, ஆயுதச் சேதமோ இல்லாமலே இருக்க முடியுமா! 'ஐயா, நமது எதிரிகளால் நம்மவர்களில் யாருக்குமே ஆபத்தே ஏற்படவில்லையென்றே வைத்துக் கொள்ளுவோம். ஒரு தலைவலி, ஒரு கால் வலி, ஒரு ஜுரம், ஒரு மயக்கம், ஒரு பலஹீனம் இப்படியாக எவ்வளவு உபத்திரவம் இல்லை. அவற்றில் ஏதேனும் ஒன்று ஏற்படலாமல்லவா சிலருக்கு? அவர்களையும் கடைசிவரை, கூடவேயா இழுத்துக் கொண்டு போவார்கள். போர் முனை ஆஸ்பத்திரிக்கு அவர்கள் உடனே அனுப்பப் படக்கூடும்.

அவ்வாறு திடீரென, ஒரு பிரதேசத்திலே போகும் பொழுது, பலருக்கு வியாதி வந்து விடக்கூடும். அப்புறம் என்ன செய்வது? வேறு படைகளைக் கொண்டுவந்து, போரில் ஈடுபடுத்த வேண்டாமா? போர் முனை என்றல், அதற்கு வரும் பாதைகள் எப்பொழுதும், கவர்னர், வைசிராய் போன்றவர்கள் வரும் பொழுது உள்ள ரஸ்தாக்கள் போல, க்ஷீணுக பெருக்கி, மெழுகிக் கோலம் போட்டு வைக்கப்பட்டிருக்குமா என்ன? அந்தப் பாதைகளை வெட்டி விடவேண்டுமென்பதே போரின் முக்ய தந்திர முறைகளில் ஒன்று, எதிரியின் சப்ளை பாதையை நாம் வெட்டிவிட முயலுவதும், அவன் நமது பாதைகளைப் பாழாக்க எத்தனிப்பதும், வெகு சகஜமாச்சே!

போர் முனை ரகசியங்கள்

போர் முனைக்கு வரும் சப்ளை பாதைகள் சீராக இருந்தாலும், உள் நாட்டிலே யுத்த சாமான்கள் தயாராகித் தானே வரவேண்டும்? அதிலே கொஞ்சம் தவக்கம் ஏற்படலாம். இது போல, வேவு கோஷ்டியினரின் வேலை பூர்த்தியாகாமலிருக்கலாம். அவர்கள் பார்த்துச் சொல்லுமுன், திடுதிடுவென்று முன்னேற முடியுமா? அவ்வாறு முன்னேறினல், எதிரிகள் நம்மவர்களைச் சூழ்ந்து கொண்டாலும், சூழ்ந்து கொள்ளலாமல்லவா? யார் கண்டார்கள்? எல்லாவற்றிற்கும் மேலாக, வானத்திலே கோளாறு ஏற்படாமலிருக்க வேண்டும்.

அதோடு, பிரதேசங்களைப் பிடித்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தால் பிரயோசனமேது? பிடித்த பிரதேசங்களை நம்மதென்று கெட்டியாகச் செய்து கொள்ள வேண்டாமா? இல்லாவிட்டால், ஜப்பான்காரனை போல அகல கால் வைத்து விட்டு, அப்புறம் அடி வாங்கிக்கொண்டு, அவதிப்பட வேண்டியிருக்குமே! இவற்றையெல்லாம் உத்தேசித்தே போரின் வேகம் அவ்வப்பொழுது குறைத்துக்கொள்ளப் படுகிறது. அந்த சமயங்களிலே போர்முனைகளிலே மந்தம் ஏற்பட்டதுபோல் தானிருக்கும். சும்மா வீட்டிலுட்கார்ந்து பேப்பர் வாசிப்பவர்களுக்கு, காரமான யுத்தச் சேதிகள் கலகலப்பை மூட்டி, உணர்ச்சியை கிளப்பி விடுவதாக இருக்கலாம். அவர்களுடைய ஆவலைத் தணிக்க, யுத்தச் சேதிகள் என்பவை ஆலைகளில் தயாரிக்கப்படும் பண்டங்கள் போலுள்ளவை அல்லவே! போர்முனைகளிலே உண்மையில் நடக்கும் காரியங்களை எடுத்துக் கூறுபவை தானே யுத்தச் சேதிகள். அவை எப்பொழுதும் காரமான சேதிகளாக இருப்பது சாத்தியமில்லை. தயிர் பச்சடி, பருப்பு, கோசுமல்லி முதலிய கார மற்ற தயாரிப்புகளும் விருந்திலே பரிமாறப்படுவது போல, அவ்வப்போது காரமற்ற செய்திகளும் வரத்தான் வரும். எதிரியின் போக்கைக் கவனித்து, நடத்தும் போர் எப்பொழுதும் எதிர்பார்க்கிற வழியாக அபிவிருந்தியடைந்து கொண்டிருப்பதென்பது அசாத்தியம். மழையும், பனியும், புயலும் யுத்த முனைகளிலே பெரிய மந்தத்தை உண்டு பண்ணும். ஆகவே, போரிலே மந்தம் என்றதும், "த்சு!" என்று திள் கொட்டி, ஸ்வாரஸ்யம் இழந்துவிடப்படாது. புலி பதுங்குவதெல்லாம் பாய்வதற்குத் தான் என்பார்கள் அல்லவா? அதே போல, இந்த மாதிரி மந்தங்கள் ஏற்படுவதெல்லாம், அடுத்து வரும் பயங்கரமான போர்களுக்கான அறிகுறிகள் என்றே கொள்ளலாம். மொத்தத்திலே, நேச தேசத்தார் எது வந்தபோதிலும் ஜெர்மனியையும், ஜப்பானையும் பூரணமாக மட்டம் தட்டும் வரை யுத்தத்தை நிறுத்தப் போவதில்லை. இதிலே எள்ளளவும் சந்தேகமே வேண்டாம். கூடிய சீக்கிரமே ரஸமான சேதிகள் உலகெங்கும் பாய்ந்து பரவப் போகிறது. ஒவ்வொரு சேதியும் நம்மவர்களுக்கு ஊக்க மூட்டுவதாகவும், நமது எதிரிகளுக்கு பேரிடிகள் விழுவது போலவும், காதிலே நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலவும் இருக்கப்போகிறது.

சில ரஸமான செய்திகள்

ஐயோ ஜெர்மனியே!

ஜெர்மனி மீதும், ஜெர்மானியர் வசமுள்ள பிரதேசங்கள் மீதும் போன ஏப்ரல் மாசத்திலே நேச தேச விமானங்கள் போட்ட குண்டுகள் அசாத்தியம். ஜெர்மானிய விமானப் படையின் சகதியைக் குறைக்கவும், ஜெர்மனியிலே யுத்த சாமான்கள் தயாரிக்கப்படுவதை மட்டுபடுத்தவும், ஜெர்மன் ராணுவத்திற்கு உதவிகள் போகும் ரயில் பாதைகளையும், ரஸ்தாக்களையும் பாழாக்கவும், நேசதேச விமானக் குண்டு வீச்சு வெகுவாக உதவியிருக்கிறது. இந்த மே மாசத்திலே, இந்தத் தாக்குதல்கள் இன்னும் அதிகமாகுமென்கிறர்கள். ஐயோ! ஜெர்மனியே! ஒரு ஹிட்லரைப் பெற்றெடுத்ததற்காக, உனக்கு என்னென்ன கஷ்டங்கள்!

நேச தேசத்தார் ஒரு முறையில் மட்டுமல்ல, பல வகைகளிலும் ஜெர்மனியைத் திணற வைத்து, யுத்தத்தைச் சீக்கிரமே முடிக்கப் பார்க்கிறர்கள். ஐரோப்பா மீது படையெடுக்கத்தான் போகிறர்கள். அது சீக்கிரமே இருக்கும். அதைப் பற்றிய விஷயங்கள் வெகு ரகசியமாக இருக்கின்றன. இப்பொழுது லண்டனில் கூடியுள்ள சாம்ராஜ்ய குடியேற்ற நாட்டுப் பிரதம மந்திரிகள் ஐவருக்கும் அந்த ரகசியங்கள் இப்பொழுது தெரிந்திருக்கும். அந்த ரகசியங்களை அறிய ஹிட்லர் ஆவலாகத் தானிருப்பார். அவருக்கும் அது வெளியிடப்படும். ஆனல், சாம்ராஜ்ய குடியேற்ற நாட்டுப் பிரதம மந்திரிகள் அவற்றைக் கேட்டுக்கொள்ளுவது போல், நிம்மதியாக சிகரெட் சாப்பிட்டுக் கொண்டே கேட்டுக்கொள்ள முடியாது.

பிரமாதமான ஏற்பாடுகள்

ஹிட்லர், இந்த இரண்டாவது போர் முனையைச் சமாளிக்க பிரமாதமான ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறராம். இந்த இரண்டாவது போர் முனையைப் பற்றி அவருக்கு எப்பொழுதும் பீதி தான். இந்த பீதி மட்டும் இல்லாவிட்டால் அவர் இதற்குள் ருஷ்யப் போர் முனைக்கு ஏகப்பட்ட படைகளைக் கொண்டு தள்ளியிருக்கமாட்டாரா?

இத்தாலியில் நடக்கும் போரும் ஹிட்லரின் திட்டங்களைப் பாழாக்க ஒருவாறு உதவியிருக்கின்றன. அந்தப் போரும் மேற்கிலிருந்து தினம் ஆயிரக் கணக்கில் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மன் பிரதேசங்கள் மீது குண்டு வீசுவதும் ருஷ்யர்களுக்கு ரொம்பவும் உதவி புரிந்திருக்கின்றன என்பதை ஸ்டாலின் மே தினத்தின் போது சொல்லியிருக்கிறர்.

அடுத்த பெரிய போர்

அடுத்த பெரிய போருக்கு ருஷ்யா தன்னை சித்தமாக்கிக் கொண்டிருக்கிறது. அது ருஷ்யாவின் மத்ய எல்லையருகே ஏற்படலாம் என்கிறர்கள்.

டென்மார்க்கிலே திடீர் என்று நாஜிகளுக்கு வயிற்றிலே புளியைக் கரைத்து விடும்படியான சம்பவங்கள் சில நடந்தன. அங்கே பல இடங்களில் யார் யாரோ சதிகள் செய்து முக்யமான இடங்களில் எல்லாம் வெடி வைத்து விட்டார்கள். ஜெர்மானியர் பரபரப்போடு ஏதேதோ செய்தார்கள். அப்பால் பார்த்தால், நேச தேச விமானங்களிலிருந்து குதித்து பாரசூட் படையினரே அந்த வேலைகளையெல்லாம் செய்தனர் என்று தெரிந்தது.

துடி துடிப்பும், வெடி வெடிப்பும்

ஜெர்மானியர் வசமுள்ள நாடுகளி லிருப்பவர்கள் துடியாக துடித்து, ஜெர் மானியரின் கழுத்தைச் சீவப் பறப்பதாக தெரிகிறது. நேச தேசத்தாரின் பிர சாரமே இதற்குக் காரணம். பிரான்சிலே ஜெர்மானியருக்கு தினம் விடிந்தால் சங் கடமாகவே இருக்கிறதாம். ஒவ்வொரு மாதமும் ஆயிரத்திலிருந்து ஆயிரத் தைநூறு வெடி விபத்துக்கள் பிரான்சில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதாம். நேச தேசத்தார் இரண்டாவது போர் முனையை ஆரம்பித்து விட்டால், இவர்கள் எல்லாம் தங்கள் ஸ்வரூபத்தைக் காட்டுவார்கள் என்பது நிச்சயம்.

படை யெடுக்க !

படை யெடுப்பிற் கென்று கப்பல்கள் மேலும் கட்ட பல லக்ஷக் கணக்கான பவுன்களை பிரிட்டிஷ் சர்க்கார் சாங்ஷன் செய்திருக்கிறது. அமெரிக்கா மேற் கொண்டு மேற்கொண்டு ஆட்களையும் ஆயு தங்களையும் சீமையில் கொணர்ந்து குவித்துக் கொண்டிருக்கிறது.

நேச தேசத்தார், ஜெர்மனியை இன் னெரு விதத்தில் திணற அடிக்க வகை செய்திருக்கிறார்கள். இப்பொழுது நடு நிலைமை வகிக்கும் ஸ்பெயின், துருக்கி, ஸ்வீடன், போர்ச்சுகல், அயர்லாந்து தேசங்களிலிருந்து ஜெர்மனிக்கு எத் தகைய உதவியும் கிடையாமலிருக்க நிர் பந்தங்கள் சிலவற்றை ஏற்படுத்தினார்கள். யுத்த தளவாடங்கள் சிலவற்றைத் தயாரிக்க சில முக்யமான மூலப் பொருள் களை ஜெர்மனி இந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டி யிருக் கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க நேச தேசத்தார் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

கழுத்தைப் பிடிக்கிறார்கள்

துருக்கி நேச தேசத்தாரின் விருப்பப் படியே நடக்கத் தீர்மானித்தது. க்ரோம் ஏற்றுமதியை நிறுத்தியது. இப்பொழுது ஸ்பெயின் தேசம், நேச தேசங்களுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டது. உல்ப்ராம் என்ற பொருளை பெருவாரி யாகக் குறைத்தனுப்பப் போகிறதாம் அது. அதோடு, தனது நாட்டிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகர்கள் காரியாலயங்களை மூடி, ஜெர்மன் ஏஜெண்டுகளையும் வெளியேற்ற ஒப்புக் கொண்டு விட்டதாம். இதற்குக் காரணம், ஸ்பெயினுக்கு நேச தேசங்கள் எண்ணெய் அனுப்ப மறுத்தது தான். முன்பு ஹிட்லர் என்றால் நடுங்கிக் கொண்டு, வாலண்டியர்களை ருஷ்ய முனைக்கு அனுப்பிய ஸ்பெயின், இப்பொழுது அந்த வாலண்டியர்களைத் திரும்ப வரவழைத் துக் கொண்டிருக்கிறது. இதிலிருந்தே ஜெர்மனியின் சக்தி எவ்வளவு குறைந் திருக்கிறதென்று தெரியவில்லையா !

பஸிபிக்கிலிருந்து !

பஸிபிக் மகா சமுத்திரப் பிரதேசங்களி லிருந்து இனிய சேதிகள் வந்த வண்ண மாகவே இருக்கின்றன. ட்ருக் துறை முகம் சும்மா உதைபட்டுக் கொண்டே யிருக்கிறது. நியூகினியாவில் நேச தேசப் படைகள் அபார வெற்றிகளை யடைந்து கொண்டிருக்கின்றன. ஜப்பானியரின் திட்டங்கள் சீட்டுக்கட்டால் கட்டப்படும் மனை போல், சிதறி விழுந்து கொண்டிருக்கின் றன.

சமர்த்து வேலை

பிரிட்டிஷ் நீர் மூழ்கிகள் வங்காளக் குடாக் கடலில் புகுந்து ஜப்பானியப்போர்க் கப்பல்களையும் வேறு சில சாமான் கப்பல் களையும் மூழ்கடித்திருக்கின்றன. மலாக் கா ஜல சந்தியில் கூட இவை அட்டகாசம் செய்திருக்கின்றன. அந்தமான் தீவில் உள்ள போர்ட்பிளேர் தாக்கப்பட்டி ருக்கிறது. லூயி மவுண்ட் பேட்டன் பிரபு சும்மா இல்லை என்பதை இச்சேதிகள் காட்டவில்லையா ? இன்னும் பார்த்துக் கொண்டே யிருங்கள். 'பஸ்ட் கிளாஸ்' சேதிகள் பல, கூடிய சீக்கிரமே வெளி யாகும்.

ஏ. ஆர். பி. பெண்கள் படை

ஏப்ரல் மாதம் 18-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை சென்னை 'ஐலண்ட்' மைதானத்தில் ஏ.ஆர்.பி. பெண்கள் படையினரின் அணி வகுப்பு நடை பெற்றது. அது போது நமது மேன்மை தங்கிய கவர்னரவர்களுடைய மனைவியார் தலைமையேற்று, அந்தப் படையின் கொடியை அதற்கு வழங்கி னார்கள்.

விமானத் தாக்குதல்கள் ஏற்படுமானால், என்ன செய்ய வேண்டும், தற்காத்துக் கொள்வதற்கு என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்று பெண்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டியது அவசியம். இந்த முறைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதும் அவசியம். இதன் பொருட்டு ஒரு ஏ.ஆர்.பி. பெண்கள் படை அமைக்க வேண்டியது என்று 1941-ம் வருஷம் கருதினார்கள். புதிதாக அமைக்கப்பட்ட இந்தப் படைக்கு முதலில் ஸ்ரீமதி சி. ஜே. நிக்கொலஸ் தலைவியரானார். அதைத் தகுந்தபடி அமைக்க, அவர் பெரிதும் உழைத்தார். அவருக்குப் பிறகு வந்த ஸ்ரீமதி ஹெய்ல்சும் மிகத் திறமையோடு உழைத்தார். வேறு வேலையாக இவர் இப்பதவியை விட்டுப் போக நேரிட்டது அவருக்குப் பதிலாக ஸ்ரீமதி பி. பாரிஜாதம் நாயுடு அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

வெளியேயுள்ள பல பட்டணங்களிலும், இந்த ஸ்தாபனத்தின் கிளைகள் இருக்கின்றன. இப்போது 16 கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவற்றில் பல பட்டணங்களில் ஏ.ஆர்.பி. படைகளைக் கலைத்து விட்டார்கள். ஆனால், ஏ.ஆர்.பி. பெண்கள் படையினர் சில முக்கியமான விசேஷ அலுவல்களையும் செய்துகொண்டு வந்ததைக் கண்ட அரசாங்கத்தார், அவர்களுக்குள் ஏற்பட் டிருக்கும் நல்லுறவைககொண்டு, சமாதான காலத்திலும் கூட, மேலான, மிகவும் பயன்படக் கூடிய முறையில் உபயோகிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அதாவது இங்கிலாந்தில் பெண்கள் 'இன்ஸ்டிட்யூட்'கள் செய்து வருவது போல, இங்கேயும் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள். யுத்தத்திற்குப் பிறகுங் கூடப் புனர் நிர்மாண வேலையில் இந்தப் படையின ரைப் பயன் படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தார் முடிவு செய்தனர். எனவே, யுத்தம் முடிந்த பிறகுங் கூட, இந்தப் படை தொடர்ச்சியாகவும் நிரந்தரமாகவும் அமைந்திருக்க வேண்டு மென்று அனுமதித்திருக்கிறார்கள்.

தற்போதைக்கு, சென்னை நகரத்திலும், ஏ.ஆர்.பி. தொடர்ந்து வேலை செய்து கொண்டு வரும் மற்ற இடங்களிலும், இருட்டடைப்பு, பாதுகாப்பறை, வெளிச்சக் கட்டுப்பாட்டு முறைகள் முதலியவை சம்பந்தமான பிரசாரம் வழக்கப்படி நடந்து கொண்டு வருகிறது. அன்றியும், பயன்படத்தக்க வேலை களையும் செய்து கொண்டு வருகிறார்கள். உதாரணமாக, வயது வந்தவர் களுக்குக் கல்வியூட்டும் வேலையை ஒரு வட்டத்தில் மேற்கொண்டிருக்கிறார் கள். மற்றொரு வட்டத்தில், நகர சபையாரின் கூட்டுறவோடு, பிச்சைக்காரர் கள் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கப்படுகிறது. இன்னொரு வட்டத்தில், தொத்து நோய்கள் பரவாதபடி தடுக்க, சுகாதார இலாக்கா அதிகாரிகளுக்கு உதவி செய்கிறார்கள்.

இந்தப் பணியைச் செய்ய பல பெண்கள் தாமாகவே முன் வந்து இந்தப் படையில் சேர்ந்து, இந்த முக்யமான வேலையைச் செய்து முடிக்க உதவுவார்க ளென்று எதிர் பார்க்கப்படுகிறது.

முயற்சிப்பதும் உழைப்பதும் தான் இப்படையின் கொள்கை.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஏப்ரல் 26.—மாட்சிமை தங்கிய மன்னர் பிரான், பிரதம மந்திரி சர்ச்சிலை இரு முறை இன்று சந்தித்துப் பேசினர்.

கொலோன், ப்ரன்ஸ்விக் முதலிய ஜெர்மானிய ஸ்தலங்களை நேச தேச விமானங்கள் தாக்கின.

இங்கிலாந்தை தாக்க வந்த நாலு ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப் பட்டன.

ஏப்ரல் 27.—பிரிட்டன் மீது சிறிதளவு எதிரி ஆகாய விமான நடவடிக்கை இருந்தது.

நேச தேச வெடிகுண்டு விமானங்கள் எஸ்ஸென், ப்ரன்ஸ்விக் முதலிய இடங்களைத் தாக்கின.

மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் இரண்டாம் போர் முனைத் துருப்புகளைப் பார்வையிட்டார்.

ஏப்ரல் 28.—இங்கிலாந்தின் தென் கடலோரப் பிரதேசத்தைத் தாக்க சில ஜெர்மன் விமானங்கள் முயற்சித்தன.

சுமார் 1,000 நேச தேச விமானங்கள் ப்ரிட்ரிஷாபன், ஸ்டட்கார்ட் முதலிய இடங்கள் மீது குண்டுமாரி பொழிந்தன.

ஏப்ரல் 29.—பெர்லின் நகரத்தை நேச விமானங்கள் தகர்த்தன.

ஏப்ரல் 30.—தென் மேற்கு இங்கிலாந்தில் சில இடங்களை எதிரி விமானங்கள் தாக்கின.

மே 1.—ஏகாதிபத்திய பிரதம மந்திரிகள் மகா நாட்டில் பிரதம மந்திரி சர்ச்சில் அக்கிராசனம் வகித்தார்.

ஐக்கிய அமெரிக்கா, அட்லாண்டிக்.

ஏப்ரல் 26.—இரவல்-கடன் உதவி பற்றி வெளிநாட்டுப் பொருளாதார நிர்வாகஸ்தர் திரு. லியோ. டி. க்ரௌலி ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்தார். இரவல்-கடன் திட்டம் மேலும் ஒரு வருஷம் நீடிக்க வேண்டு மென்று செனட் வெளி நாட்டு விவகார கமிட்டி தீர்மானித்தது.

ஏப்ரல் 28.—ஐக்கிய அமெரிக்காவின் கப்பற் படைக் காரியதரிசி கர்னல் ப்ராங்க் நாக்ஸ் மரணமடைந்தார்.

மே 1.—ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தார் ஐரோப்பாவில் படைகள் இறங்குவதற்கு உதவ மேலும் கப்பல்கள் கட்டுவதற்கு 585 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கின்றனர்.

இந்தியா, ஸிலோன், பர்மா.

ஏப்ரல் 26.—நேச தேச ரோந்து வேலை கொஹிமாவைச் சுற்றி மும்முரமாக இருந்தது.

ஏப்ரல் 27.—கொஹிமாவுக்குச் சுற்றுப் புரங்களில் சில்லரைச் சண்டைகள் நடந்தன.

ஏப்ரல் 28.—கொஹிமாவைச் சுற்றியுள்ள எதிரியின் ஸ்தானங்களை நேசப் படைகள் பிடித்தன. எதிரியின் கேந்திர ஸ்தானங்கள் நாசமாக்கப்பட்டன. வட பர்மாவில் சீனத் துருப்புகள் கௌரியைக் கைப்பற்றின.

ஏப்ரல் 29.—கொஹிமாப் பிரதேசத்தில் மேலும் எதிரி ஸ்தானங்கள் தாக்கப் பட்டன.

ஏப்ரல் 30.—இம்பால் முனையில் நேசப் படைகள் முன்னேறி உக்ருலுக்கு 5 மைலுக்குள் வந்து விட்டன.

மே 1.—கொஹிமாவிலுள்ள பிரிட்டிஷ் படை தன் எல்லைப் பிரதேசத்தை விரிவு படுத்திக் கொண்டது கண்டு ஜப்பானியப் படைத் தலைவன் திகைக்கின்றான்.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஏப்ரல் 26.—டிகினுவுக்கும் துபாசாரிக்கும் தெற்கே கடுமையான போர் நடக்கின்றது.

ஏப்ரல் 27.—ஜாஸ்ஸிக்கு வடக்கே ரஷ்யர் ஒரு புதுத் தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றனர்.

ஏப்ரல் 30.—ரஷ்ய அன்ய விவகார உதவி மந்திரி ரஷ்ய-ஸெக்கோஸ்லோவக்கிய உறவு பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டார்.

தூரக் கிழக்குத் திசை.

ஏப்ரல் 26.—வட நியூ கினியாவில் அயிடேப் பகுதியிலிருந்து ஜப்பானியர் அடியோடு விரட்டப்பட்டனர்.

ஏப்ரல் 27.—நியூ கினியாவில் மடாங்கையும், ஹாலந்தியா பிரதேசத்திலுள்ள ஸைக்ளோப்ஸ், செந்தானி விமான தளங்களையும் நேசப் படைகள் பிடித்து விட்டன.

ஏப்ரல் 28.—இனி எதிரி ஸ்தலங்களை பஸிபிக் பகுதியில் 1,000 விமானங்கள் கொண்ட கூட்டம் தாக்குவதற்கு தயாராய் இருக்கின்றன வென்று ஐக்கிய அமெரிக்கக் கப்பற்படை உதவிக் காரிய தரிசி மிஸ்டர் கேட்ஸ் கூறினர்.

ஏப்ரல் 29.—கரோலின் தீவுகளை நேச விமானங்கள் தாக்கின.

ஏப்ரல் 30.—அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் வேவக்கை கடுமையாகத் தாக்கின.

மே 1—ஸ்கவுட்டன் தீவுகள், ரபால், வேவக், ஸொராங் முதலிய ஜப்பானிய படை ஸ்தானங்களை நேசதேச விமானங்கள் தாக்கின.

சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற யுத்த படைகளின் கண் காட்சியில் ஸ்திரீ மாணவிகள் விசேஷ ஆர்வம் காட்டினர்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.